23rd September 1961]

Gunny bags

* 1765 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோணிப்பைகள் செய்யும் தொழிற்சாலை ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

(இ) அப்படியானால், பொதுத் துறையிலா, தனியார் துறையிலா ? எங்கே ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) No, Sir.

(இ) The question does not arise.

* 1766 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1959-60-ம் ஆண்டுகளில் எவ்வளவு கோணிப்பைகள் நம் மாநிலத்திற்கு வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : About 56·6 million gunny bags were imported into Madras from other States during 1959-60.

SRI S. M. ANNAMALAI : ஸார், சில நேரங்களில் கோணிப்பைகள் கிடைக்காமல் வியாபாரிகள் கஷ்டப்படுகிறார்களே. கோணிப்பைகள் பிற மாநிலங்களிலிருந்து வருவதற்கு தடை இருப்பதால்—வாகன் பற்றாக்குறை இருப்பதால்—விலைகள் மேலும் மேலும் ஏறிக்கொண்டுபோகிறதே. இதற்கு சர்க்கார் எடுத்துக் கொண்ட முயற்சிகள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதற்கு கோணிப்பைகள் நம் மாநிலத்தில் உற்பத்தி செய்வதென்றால் அது திருப்திகரமாக இருக்கும். ஆனால் அதற்கு ஜூட் வேண்டும். ஜூட் நம் மாநிலத்தில் உற்பத்தி ஆவதில்லை. ஆனால் வேறு மூலப் பொருள்—மெஸ்டா என்ற மூலப் பொருள்—இருந்தால் கோணிப்பைகள் உற்பத்தி செய்யலாம். மெஸ்டா நம் மாநிலத்தில் எங்கே விளையும் என்றும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

Wool, etc.—Export of

* 1767 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு ஜில்லாவில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் விழும் ஆடு மாடுகளின் முடிகள் எந்தெந்த ராஜ்யங்களுக்கு அல்லது வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன ?

(இ) 1957 முதல் 1959 வரை எவ்வளவு, எங்கெங்கே ஏற்றுமதி செய்யப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A statement [a] furnishing the particulars is laid on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : மேஜை பேரில் வைக்கப்பட்டிருக்கக் கூடிய ஸ்டேட்மெண்டிலே எல்லா வெளி நாடுகளுக்கும்—வெஸ்ட் ஜெர்மனி, யுனைடெட் கிங்டம் போன்ற நாடுகளுக்கும் மற்ற நாடுகளுக்கும் மற்ற ராஜ்யங்களுக்கும்—ஏற்றுமதி செய்யப்படுவதாகத் தெரிகிறது. நம் ராஜ்யத்தில் இப்போது நம் ராஜ்யம் ; மைசூர் ராஜ்யம், மத்திய சர்க்கார்

[a] Printed as Appendix II on page 593 infra.